இலங்கை பூராவுமுள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் சுமார் 4396581 மாணவ, மாணவியருக்கு வரும் 18 ஆம் திகதி அன்று சீருடைத்துணிப் பக்கற்றுக்கள் ஒப்படைக்கப் படவேண்டும் என கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம் டி. டி. பீரிஸ் கல்வி, உயர் கல்வி அமைச்சின் சுற்று நிருப மூலம் சகல மாகாண, கோட்டப்பணிப்பாளர்களுக்கும், அதிபர்களுக்கும் தெரியப் படுத்தியுள்ளார்.

இத்தினத்தன்று சகல மாணவ, மாணவியரும் பாடசாலைக்கு தவறாது சமுகம் அளிக்கக்கூடிய வகையில் அவர்களுக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தவேண்டும் என்றும், குறிப்பாக ஆண்டு ஐந்துக்குக் கீழ் உள்ள வகுப்புக்களில் கற்கும் மாணவர்களினது பெற்றோர்களை பாட சாலைக்கு அழைத்து பாடசாலை வளவில் நடைபெறும் வைபவம் ஒன்றில் சீருடைத்துணிப் பக்கற்றுக்கள் மாணவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும்,

1992 டிசம்பர் மாதக பொ. த. (சா/த) பரீட்சை எடுத்து பரீட்சை முடிவை எதிர்பார்த்து நிற்கும் மாணவ, மாணவியருக்கும் இவ் இலவச சீருடை பக்கற்றுக்கள் வழங்கப்பட வேண்டும் என்றும், அவர்களையும் இத்தினத்தில் அழைக்கப் படவேண்டும். என்றும் கடும் சுகவீனம், தொற்றுநோய், வைத்திய சாலையில் அனுமதித்தல் மற்றும் தவிர்க்கமுடியாத நிலைவரம் காரணமாக பாடசாலைக்கு வராதோருக்கு மட்டும் வகுப்பாசிரியர்மூலம் வேறொரு தினத்தில் அவர்களுக்கு வழங்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 18ஆம்திகதி ஆரம்பமாகி ஒரு கிழமை கால எல்லைக்குள் இவ் இலவசசீருடை வழங்கல் விடயத்தை முடித்து இதுதொடர்பான அறிக்கையை தமக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு இச் சுற்றறிக்கைகள் மூலம கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார் (17)

## விசேட கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள முறைசாராக்கல்விப்போதனாசிரியர், ஒழுங்கமைப்பாளர்களுக்கான விசேட கூட்டம் 16-01-93ஆம் திகதி காலை 9 00 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாகவும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறும் யாழ். கல்வித்திணைக்கள தொழில் நுட்ப முறைசாராக்கல்விப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியம் கேட்டுள்ளார்.

மேலும் 1993-ம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கீடு இன்னும் வந்துசேராததாலும் பயிற்சி மதிப்பீட்டு வேலைகள் நிறைவேற்றி முடிக்காத படியாலும் 31 01.93 வரை மாணவர்களுக்கு விடுமுறை வழங்குமாறும் அவர் பணித்துள்ளார். (17)

## பத்திரிகை ஆசிரியர் வீடு மீது குண்டுத் தாக்குதல்

இடதுசாரிகளின் உத்தியோக பூர்வ வெளியீடான அத்த பத்திரிகையின் செய்தி ஆசிரியரான டெனட் ரூபசிங்கவின் வீடு பெற்றோல் குண்டு வீச்சுக்கு இலக்காகியது.

ராகம தேவத்த பகுதியில் அமைந்துள்ள இவரது வீட்டிற்கு நள்ளிரவு பதினொரு மணியளவில் குண்டு வீசப்பட்டது. எனினும் வீசப்பட்ட குண்டுகள், வீட்டிற்கு முன்பாக இருந்த பூச்சாடிகளின் மத்தியிலேயே வீழ்ந்து வெடித்துள்ளன. இக் குண்டு வீச்சு அரசியல்பழிவாங்கல் என்றும், இவற்றிற்கு தாம் பயப்படப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். மக்களின் கஷ்டங்கள் அங்கிலிக்கன் ஆயருக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாண விஜயம் மேற்கொண்ட அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோவிற்கு யாழ். மக்கள் எதிர்நோக்கியிருக்கும் இன்னல்கள் பற்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் விளக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது தொழில்வாய்ப்பின்மை, போக்குவரத்து பிரச்சினைகள், விவசாயப் பிரச்சினைகள், உணவுப் பற்றாக்குறை, கல்விப்பாதிப்பு என்பன சம்பந்தமாக தனித்தனி அறிக்கைகளும் ஆயரிடம் கையளிக்கப்பட்டது.

## 19 கோடி 78 லட். ரூபா அகதிகளுக்கென உதவி

[யாழ்ப்பாணம்]

வடக்கு - கிழக்கில் இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவும் முகமாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானம் 19 கோடியே 78 இலட்சம் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சுக்கு வழங்கியிருப்பதாக அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி. த சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த நிதிக்கான உதவியை அவுஸ்ரேலியா, கனடா, பிரிட்டன், சுவிஸ், சுவீடன், இத்தாலி, நெதர்லாந்து ஆகியவை வழங்கியுள்ளன

வடக்கு - கிழக்கு யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றுவதிலும் முக்கியமாக இந்தியாவில் இருந்து வரும் மக்களுக்காகவுமே இந்த நிதி பயன் படுத்த இருப்பதாக அவர் தெரிவித்தார்.


UNIVERSAL
FOR GOD AND COUNTRY

O/L

DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரம்)

ஆரம்பம்

16-1-93 காலை 7.45

யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/5769)





# தமிழ் மதி நகை மாடம்



## ஓர் ஆண்டுப் பூர்த்தி

தமிழீழ மக்களின் தங்க நகைத் தேவை என்ன?

எதுவானாலும் சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட 22 கரட் தங்கப்பவுண்

கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம் டி டி. பீரிஸ் கல்வி, உயர் கல்வி அமைச்சின் சுற்று நிருப மூலம் சகல மாகாண, கோட்டப்பணிப்பாளர்களுக்கும், அதிபர்களுக்கும் தெரியப் படுத்தியுள்ளார்.

இத்தினத்தன்று சகல மாணவ, மாணவியரும் பாட சாலைக்கு தவறாது சமுகம் அளிக்கக்கூடிய வகையில அவர்களுக்கு முன் கூட்டியே தெரியப்படுத்தவேண்டும் என்றும், குறிப்பாக ஆண்டு ஐந்துக்குக் கீழ் உள்ள வகுப்புக்களில் கற்கும் மாணவர்களினது பெற்றோர்களை பாட சாலைக்கு அழைத்து பாடசாலை வளவில் நடைபெறும் வைபவம் ஒன்றில் சீருடைத்துணிப் பங்கீடுகள் மாணவரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், ...யும் இத்தினத்தில் அனுமதிக்கப் படவேண்டும். என்றும் கடும் சுகவீனம், தொற்றுநோய், வைத்திய சாலையில் அனுமதித்தல் மற்றும் தவிர்க்கமுடியாத நிலைவரம் காரணமாக பாடசாலைக்கு வராதோருக்கு மட்டும் வகுப்பாசிரியர் மூலம் வேறொரு தினத்தில் அவர்களுக்கு வழங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 18ஆம் திகதி ஆரம்பமாகி ஒரு கிழமை கால எல்லைக்குள் இவ் இலவசசீருடை வழங்கல் விடயத்தை முடித்து இது தொடர்பான அறிக்கையை தமக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு இச் சுற்றறிக்கைகள் மூலம் கல்வி, உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார் (17)

...பூர்வ வெளியீடான அத்த பத்திரிகையின் செய்தி ஆசிரியரான டெனட் ரூபசிங்கவின் வீடு பெற்றோல் குண்டு வீச்சுக்கு இலக்காகியது.

ராகம தேவத்த பகுதியில் அமைந்துள்ள இவரது வீட்டிற்கு நள்ளிரவு பதினொரு மணியளவில் குண்டு வீசப்பட் ...குண்டுகள், வீட்டிற்கு முன்பாக இருந்த பூச்சாடிகளின் மத்தியிலேயே வீழ்ந்து வெடித்துள்ளன. இக் குண்டு வீச்சு அரசியல்பழிவாங்கல் என்றும், இவற்றிற்கு தாம் பயப்படப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். மக்களின் கஷ்டங்கள் அங்கிலிக்கன் ஆயருக்கு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாண விஜயம் மேற்கொண்ட அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோவிற்கு யாழ். மக்கள் எதிர்நோக்கியிருக்கும் இன்னல்கள் பற்றி அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் விளக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் அவருக்கு அளிக்கபபட்ட வரவேற்பின் போது தொழில்வாய்ப்பின்மை, போக்குவரத்து பிரச்சினைகள், விவசாயப் பிரச்சினைகள், உணவுப் பற்றாக்குறை, கல்விப்பாதிப்பு என்பன சம்பந்தமாக தனித்தனி அறிக்கைகளும் ஆயரிடம் கையளிக்கப்பட்டது.


# O/L
## DAY CLASS

(பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரம்)

**ஆரம்பம்**

**16-1-93 காலை 7.45**

**யூனிவேர்சல்**

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

(சி/5769)





# தமிழ் மதி நகை மாடம்



## ஓர் ஆண்டுப் பூர்த்தி

**தமிழீழ மக்களின் தங்க நகைத் தேவை என்ன?**

**எதுவானாலும் சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்ட 22 கரட் தங்கப்பவுண்**

**எமது தொழில் நுட்பத்தில் மின்னும் பொன்னகைகள் அத்தனைக்கும்நாடுங்கள்.**

# — தமிழ்மதி நகை மாடம் —

ஓராண்டு பூர்த்தியைக் கொண்டாடும் தமிழ்மதி நகை மாடம் தனது வாடிக்கையாளர்கட்கு இனிய பொங்கல், புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றார்கள்

(எம்மிடம் நகை பெற்றவர்கள் தமது ரசிதுகளைக் காட்டி (25-01-93 க்கும் பின்) அழகிய கலண்டர்களை இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்)

நயம், நாணயம், நம்பிக்கை உத்தரவாதத்துடன் நவீன டிசைன் நகைகளை நாள் தோறும் அறிமுகப்படுத்துவோர்

# தமிழ்மதி நகை மாடம்

**82/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**

(சி-5783)

**சிந்தனைக்கு**

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை.

— திருக்குறள்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 14-01-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2028
உ. பெ. எண் - 05

## போராடுவோம் வெற்றிபெறுவோம்

இன்று தைப்பொங்கல் திருநாள். இது தமிழர்களின் - உழவர்பெருமக்களின் பெருநாள். உழைப்பாளர்கள் தமது அறுவடையைக் கொண்டு மகிழ்ந்திருக்கும் நன்னாள். அத்தோடு 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற நம்பிக்கையுடன் தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடரும் நாளும் ஆகும்,

ஆனால், இத் தைப்பொங்கல் திருநாளை மகிழ்வுடன் கொண்டாடக் கூடிய சூழ்நிலையில் தமிழ் மக்கள் இன்றில்லை. சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதலும், தமிழ்ப் பிரதேசங்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையும், இத் திருநாளை அவர்கள் மகிழ்வுடன் கொண்டாட முடியாத கஷ்டநிலையை உருவாக்கியுள்ளது. அதாவது சிங்களப் பேரினவாதம் தமிழரின் இந் நன்னாளையே கேள்விக்குரிய தாக்கியுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் எமது நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. எமது நிலங்களில் சிங்களவர்கள் குடியேறியுள்ளனர் அல்லது அவை தரிசு நிலங்களாக மாறியுள்ளன. 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கையை எமது விவசாயிகள் பெறுவதற்கு அவர்கள் உழுது பண்படுத்தி அறுவடைசெய்ய அவர்களின் நிலம் அவர்களிடம் இல்லை.

இதேவேளை, தமிழ் பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார, எரிபொருள் தடையானது ஏனைய தமிழ் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் பாதித்துள்ளது. அவர்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பலர் தமது தொழில் நடவடிக்கையை முற்றாக இழந்துள்ளனர். இதனால் வறுமையின் பிடியில் சிககியுள்ளனர்.

அத்தோடு,லட்சக்கணக்கான மக்கள் தமது வீடு

## பொங்கல் விழா

(குருநகர்)

இம்முறை தைப்பொங்கல் விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு யாழ். திருமறைக் கலாமன்றம் திட்டமிட்டுள்ளது.

தைப்பொங்கல் தினமான இன்று வியாழன் காலை மன்ற இயக்குநர் பேராசிரியர் வண. நீ. ம. சவிரிமுத்து அடிகளார் தலைமையில் முன்றலில் சூரியனுக்கு பொங்கல் செய்யப்படும்.

அதனை அடுத்து மன்றக் கேட்போர் கூடத்தில் திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில அதிபர் அருட்சகோதரி எம். ஜோலன்ட், தமிழ்மடம் அதிபர் அருட்சகோதரி தியோப்பின் ஆகியோர் உரை விருந்து வழங்குவர்.

மாலை 6.30 மணிக்கு மன்ற வெளியரங்கில் சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. எ. பேணாட் தலைமையில் இலக்கிய இசைநாடகம் 'வளையாபதி'' நான்காவது தடவையாக மேடையேறுமென அறிவிக்கப்படுகிறது.

(21)

## சிறிலங்கா ராணுவத்திலிருந்து ஆயுதங்களுடன் தப்பி ஓடிய படையினரால் தொல்லை

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து ஆயுதங்களுடன் தப்பியோடிய 50பேர்ஒன்றிணைந்து கொலை கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக எம்பிலிப்பிட்டிய பொலிசாரினால் நடத்தப்படும் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இரவு வேளையில் வழிப்பறி கொள்ளைகள் திட்டமிட்டு பல நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது தெரியவந்துள்ளது. அண்மையில் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அவரை விசாரணை செய்யும்போது இராணுவத்திலிருந்து துப்பாக்கிகள், ரவைகள், வெடி குண்டுகள் பல மறைத்து வைத்திருந்ததை கண்டு பிடிக்கப்பட்டதாக எம்பிலிப்பிட்டிய பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை கொலை, கொள்ளை பலவற்றில் ஈடுபட்டிருந்த குழு ஒன்றின் தலைவர் ஒருவரை இக்கடுவ பொலிசார் கைது செய்துள்ளனர். இவர் 1989-ம் ஆண்டு இராணுவத்தில் சேர்ந்தவர் என்றும் அதன் பின்னர் இராணுவத்தில் இருந்து தப்பியோடி கொள்ளை குழுவுக்கு தலைமை தாங்குவதாக இக்கடுவ பொலிசார் தெரிவிக்கின்றனர்.

பொலநறுவைமாவட்டத்தில் பல கொலைகளை இவர்மேற்கொண்டு வந்ததாகவும், இவரை கைது செய்த பின்னர் இவரினால் கொள்ளையடிக்கப்பட்ட பல பொருள்கள் மீட்கப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

## வங்கி நடைமுறைகள் மக்களுக்கு விளக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வங்கியாளர் நிலையமும், யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கமும் இணைந்து யாழ். நாவலர் வீதியில் அமைந்திருக்கும் நாவலர் கலாசார மண்டபத்தில் தமது அலுவலகத்தை திறந்து வைக்கவுள்ளன.

நாளைய தினம் பிற்பகல் மூன்று முப்பது மணியளவில், இவ் அலுவலகத்தை யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் மங்கள விளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார். இந் நிலையம்மக்களுக்குவங்கியியல் சம்பந்தமான அறிவைப்புகட்டவும், வங்கியின் நடைமுறை சம்பந்தமான சகல தேவைகளையும், இது சம்பந்தமான நவீன செயற்பாடுகளையும் உடனுக்குடன் மக்களுக்கு தெரியப்படுத்தவும் செயற்படும் எனத் தெரியவருகின்றது.

## தியாகராஜசுவாமி உற்சவம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக கவின் கலை மன்றம் நடாத்தும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் உற்சவ ஆரம்ப விழா நாளை இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் நடைபெறும். இதில் செல்வன் எஸ். கோபிதாஸ் அவர்களின் வயலின் கச்சேரியும் திரு. க. முருகவேள் அவர்களின் சிறப்புரையும் திருமதி. சிதம்பரநாதன் அவர்களின் மதிப்புரையும் இடம்பெறும்.

## யாழ். கல்வி மாவட்டத்தை மூன்றாகபிரிக்க ஆலோசனை

யாழ். மாவட்ட கல்வி நிர்வாக செயற்பாடுகளை வசதியாகவும் இலகுவாகவும் மேற்கொள்வதற்காக அங்கு மூன்று கல்வி நிர்வாகப் பகுதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சைக் கோரியுள்ளது.

மாகாண அமைச்சின் செயலாளருக்குசங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேலணை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளை ஒரு பிரிவாகவும் மருதனார் மடம், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளை ஒரு பிரிவாகவும், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளை ஒரு பிரிவாகவும் மொத்தம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானின்போக்குகுறித்து அமெரிக்கா எச்சரிக்கை

[வாஷிங்டன்]

இந்தியாவில் பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் சீக்கிய தீவிரவாதிகளுக்கும், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் ஆதரவு அளிப்பதாக செய்திகள் வெளியாவது குறித்து விசனம் அடைவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சு தெரிவித்திருக்கிறது.

இதனால்பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின்பட்டியலில்பாகிஸ்தானையும் சேர்ப்பது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அமெரிக்கா கடந்த வெள்ளியன்று எச்சரிக்கை செய்திருக்கிறது.

அமெரிக்காவின் முக்கியமான நேச அணியாக திகழ்ந்த நடொன்றுக்கு எதிராக இத்தகைய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது அரசியல் வட்டாரங்களை ஆச்சரியப்பட வைத்திருக்கிறது.

## சிவசேனையை தடை செய்க

[சென்னை]

பம்பாய் நகரத்திலிருந்து தமிழர்கள் விரட்டப்படுவதற்கு சிவசேனைதான் காரணம் எனவும், அந்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டும் எனவும் அகில இந்திய பார்வார்ட் புளொக் அமைப்பின் தமிழக தலைவர் வல்லரசு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாக். உதவக் கூடாது

### -பிரிட்டன் கோரிக்கை

சர்ச்சைக்குரிய காஷ்மீர் இமயமலைப் பகுதியில் இந்திய ஆட்சிக் கெதிராகப் ...

9000க்கு அதிகமானோர் ...

## 'சார்க்' அர்த்தமுள்ளதாக்க இந்தியா ஒத்துழைக்கும்

### - ஆர். எல். பாட்டியா

[டாக்கா]

தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பை அர்த்தமுள்ளதாக்க முழு ஒத்துழைப்பையும் நல்குமென்று இந்தியா ...

...றது என்று அர்த்தப்படுத்திக் கொள்ளலாகாது எனவும் குறிப்பிட்டார்.

இன்று தைப்பொங்கல் திருநாள். இது தமிழர்களின் - உழவர்பெருமக்களின் பெருநாள். உழைப்பாளர்கள் தமது அறுவடையைக் கொண்டு மகிழ்ந்திருக்கும் நன்னாள். அத்தோடு 'தைபிறந்தால் வழிபிறக்கும்' என்ற நம்பிக்கையுடன் தமது வாழ்க்கைப் பயணத்தைத் தொடரும் நாளும் ஆகும்,

ஆனால், இத் தைப்பொங்கல் திருநாளை மகிழ்வுடன் கொண்டாடக் கூடிய சூழ் நிலையில் தமிழ் மக்கள் இன்றில்லை. சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் தாக்குதலும், தமிழ்ப் பிரதேசங்கள் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையும், இத் திருநாளை அவர்கள் மகிழ்வுடன் கொண்டாட முடியாத கஷ்டநிலையை உருவாக்கியுள்ளது. அதாவது சிங்களப் பேரினவாதம் தமிழரின் இந் நன்னாளையே கேள்விக்குரியதாக்கியுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் எமது நிலங்கள் பறிக்கப்பட்டுள்ளன. எமது நிலங்களில் சிங்களவர்கள் குடியேறியுள்ளனர் அல்லது அவை தரிசு நிலங்களாக மாறியுள்ளன. 'தைபிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கையை எமது விவசாயிகள் பெறுவதற்கு அவர்கள் உழுது பண்படுத்தி அறுவடைசெய்ய அவர்களின் நிலம் அவர்களிடம் இல்லை.

இதேவேளை, தமிழ் பிரதேசங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார, எரிபொருள் தடையானது ஏனைய தமிழ் தொழிலாளர்களின் வாழ்க்கையையும் பாதித்துள்ளது. அவர்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பலர் தமது தொழில் நடவடிக்கையை முற்றாக இழந்துள்ளனர். இதனால் வறுமையின் பிடியில் சிககியுள்ளனர்.

அத்தோடு,லட்சக்கணக்கான மக்கள்தமது வீடுகளை இழந்து அகதிமுகாம்களில் வாழ்கின்றனர். ஆண்டாண்டு காலமாக அவர்கள் பொங்கலிட்ட அவர்களின்வீட்டுமுற்றங்கள் இன்று ஆக்கிரமிப்பாளர்களின் காலடியில் உள்ளன. அவர்களுக்குப் பொங்கலிடவும், உறவினரை வரவேற்று உபசரிக்கவும் வீட்டு முற்றமும் இல்லை, வீடுமில்லை. அதாவது அந்நியர் ஆக்கிரமிப்பால் எமது பண்டிகைகள் செழிப்பற்றுப் போயுள்ளன.

ஆனால், இன்னமும் நாம் தளர்ந்துவிடவில்லை. எமது பாரம்பரியம், பண்பாடு என்பனவற்றை நாம் விட்டு விடவில்லை. இவ்வளவு நெருக்கடியில் எமது பண்டிகைகளை நாம் ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கின்றோம். அதாவது எதிரியால் எம்மை வெற்றி கொள்ள முடியவில்லை. இதற்கு, 'நாம் வெல்வோம்' என்ற நம்பிக்கை எம்மிடம் இருப்பதே காரணமாகும்.

இவ் வெற்றிக்காக தமிழர்கள் ஆகிய நாம் பெருமளவுமுதலீட்டைச் செய்துள்ளோம். விலைமதிப்பற்றபல ஆயிரம் உயிர்களைக் கொடுத்துள்ளோம். பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை இழந்துள்ளோம். இருந்தும், இன்றும் பாதுகாப்பான சுதந்திரமான வாழ்க்கை எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் நாம் போராடுவோம், வெல்வோம் என்பது உறுதி. ''தை பிறந்தால் வழிபிறக்கும்'' என்ற எமது முதாதையினரின் நம்பிக்கையை மெய்ப்பிப்போம்.

(21) பொலிசார் தெரிவித்தனர்.

# யாழ். கல்வி மாவட்டத்தை மூன்றாகபிரிக்கஆலோசனை

யாழ் மாவட்ட கல்வி நிர்வாக செயற்பாடுகளை வசதியாகவும் இலகுவாகவும் மேற்கொள்வதற்காக அங்கு மூன்று கல்வி நிர்வாகப் பகுதிகளை ஏற்படுத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சைக் கோரியுள்ளது.

மாகாண அமைச்சின் செயலாளருக்குசங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேலணை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளை ஒரு பிரிவாகவும் மருதனார் மடம், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளை ஒரு பிரிவாகவும், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளை ஒரு பிரிவாகவும் மொத்தம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

தமது அலுவலகத்தை திறந்து வைக்கவுள்ளன.

நாளைய தினம் பிற்பகல் மூன்று முப்பது மணியளவில், இவ் அலுவலகத்தை யாழ். மாநகர ஆணையாளர் வி. பி. பாலசிங்கம் மங்கள விளக்கேற்றி அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார். இந் நிலையம்மக்களுக்குவழங்கவுள்ள சம்பந்தமான அறிவைப்புகட்டவும், வங்கியின் நடைமுறை சம்பந்தமான சகல தேவைகளையும், இது சம்பந்தமான நவீன செயற்பாடுகளையும்

## உற்சவம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக கவின் கலை மன்றம் நடாத்தும் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் உற்சவ ஆரம்ப விழா நாளை இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் நடைபெறும். இதில் செல்வன் எஸ். கோபிதாஸ் அவர்களின் வயலின் கச்சேரியும் திரு. க. முருகவேள் அவர்களின் சிறப்புரையும் திருமதி. சிதம்பரநாதன் அவர்களின் மதிப்புரையும் இடம்பெறும்.

# பாகிஸ்தானின்போக்குகுறித்து அமெரிக்கா எச்சரிக்கை

[வாஷிங்டன்]

இந்தியாவில் பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் சீக்கிய தீவிரவாதிகளுக்கும், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் ஆதரவு அளிப்பதாக செய்திகள் வெளியாவது குறித்து விசனம் அடைவதாக அமெரிக்க இராஜாங்க அமைச்சு தெரிவித்திருக்கிறது.

இதனால்பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நாடுகளின்பட்டியலில்பாகிஸ்தானையும் சேர்ப்பது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அமெரிக்கா கடந்த வெள்ளியன்று எச்சரிக்கை செய்திருக்கிறது.

அமெரிக்காவின் முக்கியமான நேச அணியாக திகழ்ந்த நடொன்றுக்கு எதிராக இத்தகைய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது அரசியல் வட்டாரங்களை ஆச்சரியப்பட வைத்திருக்கிறது.

## சிவசேனையை தடை செய்க

[சென்னை]

பம்பாய் நகரத்திலிருந்து தமிழர்கள் விரட்டப்படுவதற்கு சிவசேனைதான் காரணம் எனவும், அந்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டும் எனவும் அகில இந்திய பார்வார்ட் புளொக் அமைப்பின் தமிழக தலைவர் வல்லரசு வேண்டுகோள்விடுத்துள்ளார்.

## காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாக். உதவக் கூடாது -பிரிட்டன் கோரிக்கை

சர்ச்சைக்குரிய காஷ்மீர் இமயமலைப் பகுதியில் இந்திய ஆட்சிக் கெதிராகப் போராட்டம் நடத்தி வரும் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பாகிஸ்தான் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் கெனத் கிளார்க் தெரிவித்துள்ளார். இந்த ஆயுத விநியோகத்தை பாகிஸ்தான் நிறுத்த வேண்டுமென லண்டன் விரும்புகிறதென அவர் கூறினார்.

கடந்த மூன்றாண்டு காலமாக தீர்க்கப்படாதிருந்து வரும் காஷ்மீர் நெருக்கடியைத் தீர்க்க இந்தியா தகுந்த அரசியல் முயற்சி ஒன்றை மேற்கொள்ள வேண்டுமெனவும் பிரிட்டன் கேட்டுள்ளது.

9000க்கு அதிகமானோர் காஷ்மீர் நெருக்கடியால் உயிர் துறந்திருப்பதையும் பிரிட்டிஷ் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் கெனத் கிளார்க் இவ்வார முற்பகுதியில் இந்தியா விஜயம் செய்தார். பாகிஸ்தான் அதிகாரிகளுடனும் அவர் பேச்சுவார்த்தை நடாத்தினார்.

பழைய பகையாளிகளான இரு நாடுகளும் நட்புறவுடன் செயல்படுவதில் பிரிட்டன் ஆர்வம் கொண்டுள்ளதாக இந்தியாவிடமும் பாகிஸ்தானிடமும் அவர் கூறினார்.

## 'சார்க்' அர்த்தமுள்ளதாக்க இந்தியா ஒத்துழைக்கும் - ஆர். எல். பாட்டியா

[டாக்கா]

தென்னாசியப் பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பை அர்த்தமுள்ளதாக்க முழு ஒத்துழைப்பையும் நல்குமென்று இந்தியா பங்களாதேசிடம் உறுதியளித்துள்ளது.

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவின் விசேட தூதுவராக டாக்கா சென்ற வெளியுறவு இணைஅமைச்சர் ஆர். எல். பாட்டியா பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலிதா ஸியாவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் பிரதமர் நரசிம்மராவ் கலந்து கொள்ள முடியாமையால் சார்க் மாநாடு இரண்டு தடவைகள் ஒத்திப்போட நேர்ந்தமையை இந்தியா சார்க் நெறிகளை புறக்கணிக்கின்றது என்று அர்த்தப்படுத்திக் கொள்ளலாகாதுஎனவும் குறிப்பிட்டார்.

பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் பேச்சுக்களை முடித்துக்கொண்ட இணை அமைச்சர் பாட்டியா அங்கிருந்து நேபாளத் தலைநகர் காட்மண்டுவுக்கு விஜயம்மேற்கொண்டார்- நேபாளத்தில் பிரதமர் ஜி. பி. கொயராலாவைச் சந்தித்து சார்க்மாநாடு ஒத்திவைக்கப்பட்டமைக்கான காரணத்தை விளக்குவதுடன் இருதரப்புப் பிரச்சினைகள் பற்றியும் விவாதிக்கவுள்ளார் திரு. பாட்டியா பிரதமர் பி. வி. நரசிம்மராவிடமிருந்து விசேட செய்தி ஒன்றையும் பங்களாதேஷ் பிரதமருக்கும் நேபாளப் பிரதமருக்கும் எடுத்துச்சென்றிருக்கிறார்.

## பாரதீய ஜனதாக் கட்சி தடைசெய்யப்பட மாட்டாது - சவான்

(டில்லி)

பாரதியஜனதாக் கட்சியோ அல்லது வேறு எந்த அரசியல் கட்சியோ தடை செய்யப்படமாட்டாது. ஆனால்தடை செய்யப்பட்ட அமைப்புகள் புதுப்புது பெயர்களில் இயங்க முற்பட்டால் அவை உரிய நேரத்தில் தடை செய்யப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

செய்தியாளர்களிடம்பேசிய அவர் மேலும் கூறுகையில், தடை செய்யப்பட்ட அமைப்புகள் புதிய பெயர்களில் இயங்குவது பற்றி மத்திய அரசுக்குத் தெரியும் எனவும் தெரிவித்தார்.

## தூதரக ஊழியர் குறைப்புக்கு இந்தியா வலியுறுத்து

(டில்லி)

இந்தியாவில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் உத்தியோகத்தர்களது எண்ணிக்கையை நூற்றிஐம்பதிலிருந்து நூற்றிப்பத்தாகக் குறைத்துக் கொள்ளும்படி பாகிஸ்தானிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகத்தில் உள்ள 64 உத்தியோகத்தர்களை இருபதாகக் குறைக்க வேண்டும் என்று பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இந்த பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பம்பாயில் உள்ள ஜின்னா மாளிகை சொத்து என்று கூறிக் கொள்ளும் சொத்தை உபயோகப்படுத்தப் போவதாகப் பாகிஸ்தான் விடுத்த வேண்டுகோளையும் இந்தியா நிராகரித்து விட்டது.

# எம்மீது திணிக்கப்பட்ட யுத்தத்தை எதிர்க்கின்றோம்

## வன்னி வெகுஜன அமைப்பு தெரிவிப்பு

யுத்தநிறுத்தத்திற்கான அறிவிப்பு ஒன்றையும் சமாதானத்திற்கான செய்தியையும் கொண்டுவரும் ஆண்டாக 1993 அமையும் என்ற எமது மக்களின் எதிர்பார்ப்பினை, அபிலாசையை 02-01-1993 யாழ் கடல்நீரேரியில் நிகழ்ந்த மனிதப் படுகொலை நிராசையாக மாற்றிற்று. தொடரும் இந்தப் புதிய ஆண்டிலே எம் மீது திணிக்கப்படும் இந்த கொடூர யுத்தத்தை நாம் வன்மையாக எதிர்க்கிறோம். ஏற்க மறுக்கிறோம். இவ்வாறு வன்னி வெகுஜன ஒன்றியம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு கிளிநொச்சி அரச அதிபருடாக அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில்மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை ஏற்று தமிழீழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் இவ் அர்த்தமற்ற கொடிய யுத்தத்தை உடனடியாக நிறுத்தி நிரந்தர தீர்வுக்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான, நிரந்தரமான, சமாதானத் தீர்வுக்கு உடன்பட வேண்டும்.

தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் படுமோசமான பொருளாதாரத் தடையை நீக்கி நல்வாழ்விற்கு வழிவிட வேண்டும்.

தமிழீழ மாணவர்களின் கல்வியைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

யாழ் கடல் நீரேரிப்பகுதியிலும், தென் தமிழீழத்திலும் நடாத்தப்பட்டுவரும் தமிழினப் படுகொலைகளை உடன் நிறுத்த வேண்டும். சுதந்திரமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படவும், மேலும் படுகொலைகள் தடுக்கப்படவும் வேண்டும் என கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 35 தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்படுவர்

(யாழ்ப்பாணம்)

பலாலி மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளில் சிறிலங்கா அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 35 தமிழ்க் கைதிகள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

தற்பொழுது கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர், கூட்டுப்படைகள் தலைமையகத்துடன் தமிழ்க் கைதிகளின் விடுதலை சம்பந்தமாக நடாத்திய பேச்சுக்களின் முடிவாகவே மேற்படி கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர் என தெரியவருகின்றது. இவர்களில் பலாலியில் இருந்து 20 பேரும், களுத்துறையில் இருந்து 15 பேரும் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

எனினும் விடுதலை செய்யப்படுவோரின் பெயர் விபரங்கள் என்பன வெளியிடப்படவில்லை என மேலும் தெரியவருகின்றது. (பா)

## கருத்தரங்கு

சங்கறாதத்தின் தைப்பொங்கல் கருத்தரங்கு இன்று (14-1-93) மாலை3 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் எஸ் குகதேவன் தலைமையில் நடைபெறும்.

## கட்டுப்பாடு

தாண்டிக்குளம் வழியாக வடக்கே செல்லும் பெண்கள் தாலிக்கொடி உட்பட சாதாரணமாகப் பெண்கள் அணிந்து செல்லும் நகைகளை மட்டுமே எடுத்துச்செல்லமுடியும் என்று வவுனியாமாவட்ட சிறிலங்கா இராணுவ இணைப்பதிகாரிகளுட்பதான தெரிவித்துள்ளார்

### உயர்தர

பெறுபேறுகள் கிடைத்துள்ளன. இதனையடுத்து இப்பாடசாலையின் அதிபர் கொத்தணி அதிபர் ஊடாக முல்லைத்தீவுக் கல்விப்பணிப்பாளருக்கு இப்பெறுபேறுகளை அனுப்பிவைத்தார்.

### மணலாற்றில்

இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. சுமார் 20 நிமிடங்கள் இடம்பெற்ற இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் பலியாகினர். இவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### களத்தில்

இவ் வைபவத்தின்போது 17 போராளிகளுக்கு தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். இச்சம்பவங்களின் தும் போராளிகளினதும் விபரம் வருமாறு:

29-08-1992 அன்று, யாழ். மாவட்டத்தில் உள்ள மண்டைதீவில் கடற்படையினரின் கடல் எல்லைக்குள் சென்ற எம்மவர்கள் மின்னல் வேக தாக்குதல் ஒன்றினை நடத்தி அவர்களது 45 அடி நீளமான "வோட்டர் ஜெற்" படகு ஒன்றினைக் கைப்பற்றினர். இத்துணிகரமான நடவடிக்கையில் ஈடுபட்ட தம்பி, ஜீவா, ஆழியன், தென்னவன் ஆகியோருக்கு திறமையாக செயற்பட்டமைக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

25-09-1992 அன்று மன்னார்

## சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி

பயிர்சிபெற விரும்புவோர் நாளை 15 - 01 - 1993 தொடக்கம் 20 - 01 - 1993 வரை விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

கீழ்க்காணும் இடங்களில் உள்ள நிலையங்களில் தொடர்புகொள்ளவும்.

(1) மூளாய்:
சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம்,
மூளாய், சுழிபுரம்,

### விசேட பயிற்சி:

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் 6 மாத காலப் பயிற்சியும், மானிப்பாயில் 1 1/2 மாத காலப் பயிற்சியும் நடைபெற உள்ளது, மானிப்பாயில் நடைபெறவிருக்கும் பயிற்சிக்கு மானிப்பாய் திருவள்ளுவர் மாதிரி சிறுவர்

## வீரச்சாவு



லெப். குமணன்
சிவராஜ்

மணலாற்றிக் காவலரண்கள் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் போராளி லெப்டினன்ட் குமணன் / சிவராஜ் (சின்னத்துரை சிவகுமார், செங்கலடி, மட்டக்களப்பு) வீரச்சாவு அடைந்தார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## 'குமண'விலிருந்து மாவை விரைந்து இறக்க வற்புறுத்து

[யாழ்ப்பாணம்]

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்துநிற்கும் "குமண" கப்பலில் உள்ள மாவினை விரைந்து இறக்காவிட்டால், மிகுதிமாவுடன் கப்பல் புறப்பட்டு திருக்கோணமலை சென்றுவிடும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினருக்கு கூறியுள்ளதாக தெரியவருகிறது.

நேற்று வரை கப்பலில் இருந்து மா முழுமையாக இறக்கப்படவில்லை. இதே வேளை இன்று பொங்கல் தினமாதலால் தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதற்காக மா இறக்கும் வேலையை நிறுத்துவதென யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தீர்மானித்துள்ளனர். ஆனால் கப்பல் விரைவில் செல்ல வேண்டும் என்பதால் தொடர்ந்து மா இறக்கும் வேலையை செய்யும்படி கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (பா)

## பல்கலை. உதவி நிதியாளர் விரைவில் விடுவிக்கப்படுவார்

(கொழும்பு)

கொழும்பில் சிறிலங்கா பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக உதவி நிதியாளர் எஸ் சாந்தமூர்த்தி இவ்வாரம் விடுவிக்கப்படுவார் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர் பல்கலைக்கழக அலுவல்கள் காரணமாக கொழும்பில் தங்கியிருந்தபோது கூட்டுப்படை தலைமையின் உத்தரவின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

இவரை விடுவிப்பதுதொடர்பாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் உயர் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மற்றும் கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட முயற்சிகளினால்இவர் விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (பா)

### மக்கள்

எதை உணர்ந்துகொள்ள முடிந்தது. கோவில்களுக்கும், கல்விக்கூடங்களுக்கும் பேரழிவு ஏற்பட்டுள்ளது பொதுக் கட்டடங்கள் தகர்க்கப்பட்டுள்ளன. இவற்றைத் தென்பகுதி மக்களுக்கு நான் எடுத்துக் கூறவுள்ளேன என்றார்.

வடக்கும் கிழக்கும் இணையாத தனிமாகாணத் தீர்வாகத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகள் அமைந்துவிட்டால்-அது பற்றி உங்கள் கணிப்பு என்ன? என்ற கேள்விக்கும் பதிலளித்த ஆயர், வடக்கும் கிழக்கும் இணையாத தனி மாகாணச் சமஷ்டியாக அல்லது வேறு வகையாகவும் தெரிவுக்குழுவின் பரிந்துரைகள் வெளிவரலாம். அத்துடன் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளைக் கைகழுவிவிடுவதென்று அர்த்தப்படுத்திவிடக் கூடாது. எதுஎப்படியிருந்தாலும், தெரிவுக்குழுவின் பரிந்துரைகளிலிருந்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இடமுண்டு. அது பேச்சுவார்த்தைக்கான தளமாக அமைவதுடன், தெரிவுக்குழுவின் பரிந்துரைகள் பல மாற்றங்களுக்கும், திருத்தங்களுக்கும் உள்ளாகலாம் என்றார்.

தெரிவுக் குழுவின் ஆலோசனைதான் முடிவான முடிவு என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறுகிறாரே என்று கேட்டபோது, பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமாகவுள்ள பரிந்துரையை ஒதுக்கித் தள்ளுவது நோக்கமல்ல என்றார் அவர்.

அமைச்சர் எஸ். தொண்டமான் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க யாழ்ப்பாணம்வர முயற்சித்தபோது, சிங்கள பேரினவாதம் அவருக்குத் தடையாக அமைந்ததுபோல் உங்களுக்கும் ஏற்பட்டால்? என்று கேட்டபோது, தமிழர் பிரச்சினை குறித்துச் சிறிலங்கா சுதந்திர கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் ஓர் இணக்கத்துக்கு வந்துள்ளார்கள். முன்பிருந்தது போன்ற சூழ்நிலை இப்போது தெற்கில் இல்லை. மக்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் போரை விரும்பவில்லை. இப்போது சமாதானத்தை விரும்புகிறார்கள். புதிய தென்பு மக்களிடம் தென்படுகிறது என்றார் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ.

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் நட்புறவு கழகத்தின் பொங்கல்விழா இன்று தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார் முன்றலில் மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு ம. சிவபாலன் தலைமை வகித்து நிகழ்ச்சிகளை நடாத்துவார். இதில் சிறப்புரைகள், கவி பரங்கம், கவிதை பாடுதல், சிறுவர் நிகழ்ச்சி, மற்றும் விடுதலைக் கீதங்களும் புரட்சிகானங்களும், இசைநிகழ்ச்சிகளும், மற்றும் நாடகமுய நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன்
நுண்கலைக் கழகத்தின்
கவின்கலை மன்ற நிதிக்காக மன்றத்தினர்
வழங்கும்

ஆடல் வல்லான்
பரதநாட்டிய நிகழ்ச்சி

17-1-1993 ஞாயிறு காலை 10 மணிக்கும்

ஏறு தமிழ மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் இவ் அர்த்தமற்ற கொடிய யுத்தத்தை உடனடியாக நிறுத்தி நிரந்தரத் தீர்வுக்கான வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்.

இவ்வப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான, நிரந்தரமான, சமாதானத் தீர்வுக்கு உடன்பட வேண்டும்.

**உயர்தர**

பெறுபேறுகள் கிடைத்துள்ளன. இதனையடுத்து இப்பாடசாலையின் அதிபர் கொத்தணி அதிபர் ஊடாக முல்லைத்தீவுக் கல்விப்பணிப்பாளருக்கு இப்பெறுபேறுகளை அனுப்பிவைத்தார்.

## கருத்தரங்கு

சங்கநாதத்தின் தைப்பொங்கல் கருத்தரங்கு இன்று (14-1-93) மாலை3 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் எஸ் குகதேவன் தலைமையில் நடைபெறும்.

**மணலாற்றில்**

இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. சுமார் 20 நிமிடங்கள் இடம்பெற்ற இத்தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் பலியாகினர். அவர்களிடமிருந்து ஆயுதங்களும் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

# சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி

பயிற்சிபெற விரும்புவோர் நாளை 15-01-1993 தொடக்கம் 20-01-1993 வரை விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

கீழ்க்காணும் இடங்களில் உள்ள நிலையங்களில் தொடர்புகொள்ளவும்.

(1) மூளாய்:

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம், மூளாய், சுழிபுரம்.

## விசேட பயிற்சி:

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் 6 மாத காலப் பயிற்சியும், மானிப்பாயில் 1 1/2 மாத காலப் பயிற்சியும் நடைபெற உள்ளது. மானிப்பாயில் நடைபெறவிருக்கும் பயிற்சிக்கு மானிப்பாய் திருவள்ளுவர் மாதிரி சிறுவர் பாடசாலையில் மிகவிரைவில் தொடர்புகொள்ளவும்.

(2) யாழ்ப்பாணம்

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி துணை நிலையம், 92, ஐயனார் கோவிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(3) கரவெட்டி

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி துணைநிலையம், 50, மகாத்மா ஒழுங்கை, நெல்லியடி.

(4) கிளிநொச்சி

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி துணை நிலையம், ஆனந்தபுரம், கண்டி வீதி.

(5) புதுக்குடியிருப்பு

சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி துணை நிலையம், 1-ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

குறைந்தது இருபது பயிற்சியாளர்கள் சேர்ந்தால் நிலையங்கள் தவிர்ந்த ஏனைய எந்த இடங்களிலும் நடமாடும் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இயக்குனர்
சிறுவர் பாடசாலை
ஆசிரியர் பயிற்சித் தலைமைச் செயலகம்,

14-01-93 மூளாய். (3998)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் பகேத்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு தைமாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

றது. இவர்களில் பலாலியில் இருந்து 20 பேரும், களுத்துறையில் இருந்து 15 பேரும் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

எனினும் விடுதலை செய்யப்படுவோரின் பெயர் விபரங்கள் என்பன வெளியிடப்படவில்லை என மேலும் தெரியவருகின்றது. (பா)

## கட்டுப்பாடு

தாண்டிக்குளம் வழியாக வடக்கே செல்லும் பெண்கள் தாலிக்கொடி உட்பட சாதாரணமாகப் பெண்கள் அணிந்து செல்லும் நகைகளை மட்டுமே எடுத்துச்செல்லமுடியும் என்று வவுனியாமாவட்ட சிறிலங்கா இராணுவ இணைப்பதிகாரிகளுட்பதாக தெரிவித்துள்ளார்

**களத்தில**

இவ் வைபவத்தின்போது 17 போராளிகளுக்கு தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். இச்சம்பவங்களினதும் போராளிகளினதும் விபரம் வருமாறு:

29-08-1992 அன்று, யாழ். மாவட்டத்தில் உள்ள மண்டைதீவில் கடற்படையினரின் கடல் எல்லைக்குள் சென்ற எம்மவர்கள் மின்னல் வேக தாக்குதல் ஒன்றினை நடத்தி அவர்களது 45 அடி நீளமான "வோட்டர் ஜெற்" படகு ஒன்றினைக் கைப்பற்றினர். இத்துணிகரமான நடவடிக்கையில் ஈடுபட்ட தம்பி, ஜீவா, ஆழியன், தென்னவன் ஆகியோருக்கு திறமையாக செயற்பட்டமைக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

25-09-1992 அன்று மன்னார் மாவட்டத்தில் பூநகரியில் உள்ள பள்ளிக்குடா என்னும் இடத்தில் அமைந்திருந்த இரு இராணுவ மினிமுகாம்களையும் 62 தொடர் காவலரண்களையும் எம்மவர்கள் தாக்கி அழித்தனர். இத்தாக்குதலின் போது 1 1/2 மைல் நீளமான பகுதி எம்மவர்கள் பக்கம் வீழ்ச்சியடைந்தது. இந்த வெற்றிகரமான தாக்குதலுக்காக இப்பகுதிகளைத் திறம்பட வேவுபார்த்த தர்மேந்திரா, குலசங்கர், கொற்றவன், வெற்றிமணி, அரிமாவரசு, கதிரவன், நம்பி, ஆதவன், ஜெயம், சிவம் ஆகியோருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

30-09-1992 அன்று வவுனியா கோட்டத்தின் எல்லைப்புறமான பதவியா - பராக்கிரமபுர பகுதியில் அமைந்துள்ள கோங்வேவ என்னும் இடத்தில் அமைந்திருந்த இராணுவ மினிமுகாம ஒன்றின் மீது எம்மவர்கள் மேற்கொண்ட தாக்குதலில், மினிமுகாம் முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டது. இந்த முகாமை முழுமையாகத் தகர்த்தெறிவதற்காக இதன் பகுதிகளைத் திறம்பட வேவு பார்த்த சூரியன், பரன், சுந்தரம் ஆகியோருக்கும் தலைவர் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

**மக்கள்**

லதை உணர்ந்துகொள்ள முடிந்தது. கோவில்களுக்கும், கல்விக்கூடங்களுக்கும் பேரழிவு ஏற்பட்டுள்ளது பொதுக் கட்டடங்கள் தகர்க்கப்பட்டுள்ளன. இவற்றைத் தென்பகுதி மக்களுக்கு நான் எடுத்துக் கூறவுள்ளேன என்றார்.

வடக்கும் கிழக்கும் இணையாத தனிமாகாணத் தீர்வாகத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகள் அமைந்துவிட்டால்- அது பற்றி உங்கள் கணிப்பு என்ன? என்ற கேள்விக்கும் பதிலளித்த ஆயர், வடக்கும் கிழக்கும் இணையாத தனிமாகாணச் சமஷ்டியாக அல்லது வேறு வகையாகவும் தெரிவுக்குழுவின் பரிந்துரைகள் வெளிவரலாம். அத்துடன் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளைக் கைகழுவிவிடுவதென்று அர்த்தப்படுத்திவிடக்கூடாது. எதுஎப்படியிருந்தாலும், தெரிவுக்குழுவின் பரிந்துரைகளிலிருந்து பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இடமுண்டு. அது பேச்சுவார்த்தைக்கான தளமாக அமைவதுடன், தெரிவுக்குழுவின் பரிந்துரைகள் பல மாற்றங்களுக்கும், திருத்தங்களுக்கும் உள்ளாகலாம் என்றார்.

தெரிவுக் குழுவின் ஆலோசனைதான் முடிவான முடிவு என்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கூறுகிறாரே என்று கேட்டபோது, பேச்சுவார்த்தைகளுக்கு அடித்தளமாகவுள்ள பரிந்துரையை ஒதுக்கித் தள்ளுவது நோக்கமல்ல என்றார் அவர்.

வடக்கு-கிழக்கு இணைப்புக் குறித்த உங்கள் நிலை என்ன என்றகேள்விக்குப் பதிலளித்த அவர் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வொன்றை எட்டுவதற்கான ஆலோசனைகளை இலங்கையிலுள்ள அனைத்துத் திருச்சபைகளின்சார்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்குச் சமர்ப்பித்துள்ளோம். மதத் தலைவர்களும், பொது நிலையினருமாக தெற்கில் ஐம்பதுபேரும் வடக்கில் ஐம்பதுபேரும் இந்த மகஜரில் ஒப்பமிட்டுள்ளார்கள். மகஜரில் அடங்கியுள்ள ஆலோசனைகளை நான் வெளியிட விரும்பவில்லை என்று கூறினார்.

பொலிஸ் கைதிகள் இருவரை விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரன் விடுதலை செய்ததற்கு நாம் அவருக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம். பிரபாகரனின் இந்தச்செயலை தென் இலங்கையில் உள்ள மக்கள் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள் மீளவும் சகஜ நிலைமை ஏற்பட்டு நீதியும் சமாதானமும் நிலைக்கும் என்றும் நான் நம்புகிறேன்- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

இவர் பல்கலைக்கழக அலுவல்கள் காரணமாக கொழும்

அமைச்சர் எஸ். தொண்டமான் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்து விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க யாழ்ப்பாணம்வர முயற்சித்தபோது, சிங்கள பேரினவாதம் அவருக்குத் தடையாக அமைந்ததுபோல் உங்களுக்கும் ஏற்பட்டால்? என்று கேட்டபோது, தமிழர் பிரச்சினை குறித்துச் சிறிலங்கா சுதந்திர கட்சியும், ஐக்கியதேசியக் கட்சியும் ஓர் இணக்கத்துக்கு வந்துள்ளார்கள். முன்பிருந்தது போன்ற சூழ்நிலை இப்போது தெற்கில் இல்லை. மக்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மக்கள் போரை விரும்பவில்லை. இப்போது சமாதானத்தை விரும்புகிறார்கள். புதிய தென்பு மக்களிடம் தென்படுகிறது என்றார் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ.

ஆணைக்குழு மற்றும் கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட முயற்சிகளினால் இவர் விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (பா)

## பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தொல்புரம் நடபுறவு கழகத்தின் பொங்கல்விழா இன்று தொல்புரம் துரையன் வளவு பிள்ளையார் முன்றலில் மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு ம. சிவபாலன் தலைமை வகித்து நிகழ்ச்சிகளை நடாத்துவார். இதில் சிறப்புரைகள், கவியரங்கம், கவிதை பாடுதல், சிறுவர் நிகழ்ச்சி, மற்றும் விடுதலைக் கீதங்களும் புரட்சிகானங்களும், இசைநிகழ்ச்சிகளும், மற்றும் நாடகமும நடைபெறவுள்ளன.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன்
நுண்கலைக் கழகத்தின்
கவின்கலை மன்ற நிதிக்காக மன்றத்தினர்
வழங்கும்

# ஆடல் வல்லான்

## பரதநாட்டிய நிகழ்ச்சி

17-1-1993 ஞாயிறு காலை 10 மணிக்கும்
மாலை 4 மணிக்கும்
இருநேர நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன:

**இடம்: கைலாசபதி கலையரங்கம்**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பளிப்பு: ரூபா 50-00, ரூபா 25-00

நுழைவுச் சீட்டுக்களை மண்டபவாயிலிலும் பெற்றுக்கொள்ளலாம்.

கவின்கலை மன்றம்

(4000)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**13.01.93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்;- 7990

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-
24-4854, 26-1949, 27-9661, 27-3927, 41-9791, 26-0375, 24-5623, 26-3046, 40-7207, 42-0704, 26-6320, 24-8364, 28-0657, 26-3937, 27-6692, 71-4984, 28-1857, 42-3114, 24-5167, 28-0364, 43-2666, 26-8051, 26-0763.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-
இல்லை.